# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை

---

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech.,
## தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான நீர் நிலைகளை (தீர்த்தங்கள்) இந்து சமய அறநிலையத் துறையின் பராமரிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நரேண நீர்நிலை, பனஞ்ச நீர் நிலை ஆகிய நீர்நிலைகள் சேதமடைந்துள்ளது. மேற்காணும் சேதமடைந்த இரு நீர் நிலைகளையும், புணரமைத்து வேலி அமைத்து பாதுகாத்திட முறையே நரேண நீர்நிலை (தீர்த்தம்) ரூ 8.60 இலட்சம், பனஞ்ச நீர்நிலை (தீர்த்தம்) ரூ 8.30 இலட்சம் மதிப்பீட்டிலும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் இருபணிகளுக்கும் நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ்பணிகள் செய்திட மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 277 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6க்குட்பட்ட வேர்க்கோடு பகுதியில் 10 மீட்டர் உயரம் கொண்ட மின் விளக்கு அமைத்திட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண் ஆர்4/3236/2019 நாள் 10/10/2019ன்படி ரூ 5.00 இலட்சம் மதிப்பீடு அனுப்பக்கோரி வரப்பெற்ற கடிதத்தின் படி மேற்காணும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 278 அனுமதிக்கப்பட்டது.** |
| 3 | இராமேஸ்வரம் நகராட்சி பேருந்து நிலையம் முதல் கோயில் வரை சாலைகளின் இரு புறங்களிலும் அமைக்கப்படும் சீசன் கடைகளுக்கு மின்விளக்குகள் அமைத்து கொடுத்து அதற்கான கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கு, தற்காலிக சீசன் கட்டில் கடைகளுக்கு நாள் வாடகை வசூலித்துக்கொள்ளும் உரிமத்திற்கும் மற்றும் பேருந்து நிலையம் முதல் கோயில் வரை சாலையின் இருபுறங்களிலும், போக்குவரத்திற்கு இடையூறு இன்றி பட்டா இடங்களில் அமைக்கப்படும் கடைகளுக்கு சீசன் நாட்கள்முழுவதிற்குமான வாடகை தொகையினை வசூலித்துக்கொள்ளும் உரிமம் ஆகியவற்றிற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. தற்காலிகசீசன் கடைகளுக்கானகட்டணம் வசூலித்துகொள்ளும் உரிமங்களுக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. மேற்படி உரிமங்களுக்கான கட்டணத்தொகையினை மன்றம் நிர்ணயம் செய்யலாம். | **தீர்மானம் எண். 279 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனிஅலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.